# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8074783

C

1. District : மாவட்டம் Chennai PS: காவல்நிலையம் DVAC HQrs Year: ஆண்டு 2021 FIR No.: மு.த.அ. எண் 9 Date: நாள் 19.02.2021

2. (i) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 18.02.2021 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 1230 Hrs Time to : நேரம் வரை 1830 Hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.02.2021 Time : நேரம் 0900 Hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 19.02.2021 Time : நேரம் 0930 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் Chrompet Traffic Police Station 9km Southwest
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Chrompet Traffic Police Station Chrompet. Chennai. 44.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. Elumalai (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Arumugam
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1978 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Travels Agency (g) Address : முகவரி No. 25/32, 82nd Street, Ashok Nagar, Chennai 83.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Krishnakumar RSI.
Chrompet Traffic. P.S.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் No delay

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Contents of the FIR is attached in separate sheets herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A. [signature] 19/02/2021 S.Se[signature] 19.2.2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S.SENTHILKUMAR
Rank: நிலை Inspector of Police No. எண் ........
VAC, SSI, Chennai-16

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தலைமையக குற்ற எண்.9/2021 பிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 வழக்கின் முதல் தகவலறிக்கை வரிசை எண்.12ன் தொடர்ச்சி பின்வருமாறு.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை, சிறப்பு புலனாய்வுக் குழு ஆய்வாளர் திரு.சு.செந்தில்குமார் ஆகிய நான் 19.02.2021ந் தேதி காலை சுமார் 09.00 மணியளவில் எனது அலுவலகத்தில் பணியிலிருந்து போது சென்னை அசோக் நகர் 82 வது தெருவைச் சேர்ந்த திரு.ஆ.ஏழுமலை, த/பெ.ஆறுமுகம் என்பவர் எனது அலுவலகம் ஆஜராகி எழுத்துபூர்வமான புகார் மனு ஒன்றை என்னிடம் அளித்தார். அந்த புகார் மனு விவரம் பின்வருமாறு அனுப்புநர். ஆ.ஏழுமலை, ஆ/வ-42, எண்.25/32, 82வது தெரு, அசோக் நகர், சென்னை-83. பெறுநர், ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சிறப்பு புலனாய்வு குழு, ஆலந்தூர், சென்னை-16. அய்யா, நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து கொண்டு அதே இடத்தில் M.K.N. Car Rental என்ற Travels நடத்தி வருகிறேன். நேற்று 18.02.2021ந் தேதி காலை சுமார் 11.30 மணியளவில் எனது வாகனம் TN-09-BV-3325 ETIOS என்ற வாகனத்தை திரு.வெங்கட்ராமன் என்ற ஓட்டுநர் தாம்பரத்தில் இருந்து குரோம்பேட்டை நோக்கி வந்து அரசு நெஞ்சக நோய் மருத்துவமனை எதிரே U வளைவு எடுத்து உள்ளார். ஆனால் அங்கு U வளைவு தடை செய்யப்பட்ட பகுதி என்பதால் போக்குவரத்து காவலர்கள் வாகனத்தை நிறுத்தி உள்ளார்கள். அப்போது எனது ஓட்டுநர் வெங்கட்ராமன் சென்று காவல் அதிகாரி திரு.சிவக்குமார் அவர்களிடம் சென்று வாடிக்கையாளர் வாகனத்தில் இருப்பதால் அபராதம் எவ்வளவு என்று கேட்டு உள்ளார். உடனே திரு.சிவக்குமார் என்ற காவல் அதிகாரி அவர்கள் ரூ1200/- அபராதம் கட்ட வேண்டும் என்று கூறி உள்ளார். அதற்கு எனது ஓட்டுநர் U வளைவுக்கு 1200 ரூபாய்

அபராதமா என்றும் என்னிடம் 300 ரூபாய் தான் உள்ளது என்றும் கூறி உள்ளார். அதற்கு சிவக்குமார் அவர்கள் என்ன அதிகமாக பேசுகின்றாய் உன்னை டிரங் அண்டு டிரைவ் என்று கேஸ் போட்டுவிடுவேன் என்று மிரட்டி உள்ளார். அதற்கு எனது ஓட்டுநர் நான் குடிக்கவில்லை என்றும் வேண்டும் என்றால் சோதனை செய்து கொள்ளுங்கள் என்று கூறியுள்ளார். அதற்கு திரு.சிவக்குமார் அவர்கள் எனது ஒட்டுநரிடம் ஒழுங்காக அபராதம் கட்டுங்கள் இல்லையென்றால் உன்னை DD வழக்கில் உள்ளே தள்ளிவிடுவேன் என்று மிரட்டி உள்ளார். அதன்பிறகு நான் நேற்று 18.02.2021 பகல் சுமார் 12.30 மணியளவில் சிவக்குமார் என்ற காவல் உதவி ஆய்வாளர் அதிகாரியை நேரில் சந்தித்தேன் . அவர் என்னிடம் உனது ஓட்டுநர் அதிகமாக பேசுகிறார் அதனால் அவர் மீது DD வழக்கு போட்டு திரு.கிருஷ்ணகுமார் என்ற காவல் உதவி ஆய்வாளரிடம் அனுப்பியுள்ளதாகவும் அவரை பார்கவும் என்று கூறி Ponds Company பாலத்தின் மீது சென்று பார்க்க சொன்னார். அவரிடம் சென்று பார்த்ததில் DD கேஸ் போட்டால் ரூ.10,400 கட்ட வேண்டும் என்று கூறினார். ஆகையால் அதற்கு பதிலாக ரூ.7000/- கொடுத்தால் வழக்கு ஏதும் போடாமல் விட்டு விடுகிறனே் என்று கூறினார்கள். பிறகு நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லையென்று கூறினேன். அதற்கு பணம் இல்லையென்றால் ஒரிஜினல் ஆர்.சி புக் கொண்டு வந்து கொடுத்து விட்டு வண்டியை எடுத்துச் செல்லுங்கள் என்று கூறிவிட்டார்கள். அதன்பிறகு நான் என்னுடைய ஓட்டுநர் வெங்கட்ராமனை குரோம்பேட்டை KMS Health Centre என்ற தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்று அங்குள்ள மருத்தவரிடம் இவர் குடி போதையில் உள்ளாரா என்று பரிசோதிக்க கேட்டுக் கொண்டதின் பேரில் அவரும் அவரிடம் உள்ள Alcohal breath Analysiar மூலம் பரிசோதனை செய்து அவர் குடிபோதையில் இல்லை என்று சான்றும் வழங்கினார். மீண்டும் நேற்று சுமார் மாலை 06.30 மணிளவில் திரு.கிருஷ்ணகுமார் உதவி ஆய்வாளர் அவர்களை குரோம்பேட்டை போக்குவரத்து காவல் நிலையத்தில் சந்தித்து எனது ஓட்டுநர்

வெங்கட்ராமன் குடிக்கவில்லையென்றும், U வளைவு தவறாக வந்ததற்கு அபராதம் கட்டுகிறேன் என்று கூறினேன். அதற்கு அவர் ஒப்புக்கொள்ளாமல் மதியம் ரூ.7000/- கேட்டேன் அவ்வளவு முடியாது என்றால் ரூ.5000/- ஆவது கொடுத்தால் தான் வண்டியை விடுவிப்பேன் என்று கராராக கூறிவிட்டார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாததால் தங்களிடம் புகார் கொடுக்கின்றேன். என்னுடைய வாகனத்தை விடுவிக்க ரூ.5000/- கேட்ட திரு காவல் உதவி ஆய்வாளர் கிருஷ்ணாகுமார் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு
sd.xxxxxx
(ஆ.ஏழுமலை)
19.02.2021

sir,

Received this petition on 19.02.2021 at 09.00 hrs and after getting permission from the concerned a quiet and discreet verification was made on hthe petition, I am registering a case in V&AC, SIC, HQ Cr.No.9/2021, u/s, 7 of Prevention of Corruption (Amendment ) Act 2018 at 09.30hrs.